# சிங்கள தேசத்தில் தங்கியிருந்தபடி

# போராடுவதில் அர்த்தமில்லை தலைவர் பிரபாகரன்



தன்னிறைவுப் பொருளாதாரம் எமது இலட்சியவாழ்விற்கு மூலாதாரமானது. தனியரசு நிர்மாணத்திற்கு அத்திவாரமானது. உணவுப் பொருள்களுக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கும் சிங்கள தேசத்தில் தங்கியிருந்தபடி தனியரசு கோரிப்போரிடுவதில் அர்த்தமில்லையென தலைவர் பிரபாகரன் அர்ச்சயா பழத் தொழிற்சாலையின் முதலாவது ஆண்டு குறித்து விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வாழ்த்துச் செய்தியில் இன்று தமிழீழம் இரு முனைகளில் இரு வகையான யுத்தங்களைச் சந்தித்து நிற்கின்றது.

ஒன்று இராணுவ ரீதியான யுத்தம்; எதிரியின் ஆக்கிரமிப்பில் இருந்து எமது மண்ணை மீட்டெடுக்க நாம் நடாத்தி வரும் தேசிய சுதந்திரப்போர்.

மற்றையது பொருளாதார ரீதியான யுத்தம்; எதிரியின்

(4ஆம் பக்கம் பார்க்க)

[illegible] 04

விலை ரூபா; 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 07 ( 21 - 05 - 1991 ) செவ்வாய்க்கிழமை ஓசை: 92

## சம்பள நிலுவைகள் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

1980ஆம் ஆண்டு ஜூலை மாத வேலை நிறுத்தத்திற் பங்குபற்றியவர்களுக்குச் சம்பள ஏற்றமும், சம்பள நிலுவைகளும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி வேலை நிறுத்தத்திற் பங்குபற்றியமைக்காக பதவியிலிருந்து நீக்கப்பட்டு மீளவும் வேலையில் அமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு ஏலவே விதிக்கப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிகுளத்தில் அனைத்து தேவாலயங்களும்சேதம்

## பங்குத்தந்தை லடிஸ்லாஸ் தகவல்

( மன்னார் )

செட்டிகுளம் பகுதியில் உள்ள பதினொரு தேவாலயங்களும் இயங்கவில்லை. அவை இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டும், சூறையாடப்பட்டுமுள்ளன. இப்பகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பத்துப் பொதுமக்களில் சிலர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்கள். வேறு சிலரது நிலை என்னவென்று தெரியவில்லை. தற்பொழுது செட்டிகுளம் பகுதி சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக்கிடக்கின்றது.

மேற்கண்டவாறு கடந்த பதினெட்டாம் திகதியன்று மடுத் திருப்பதியில் ஈழநாதத்திற்கு அளித்த விசேட பேட்டியில் செட்டிகுள பகுதி பங்குத்தந்தை அருட்திரு. லடிஸ்லாஸ் அவர்கள் குறிப்பிட்டார்.

ஈழநாதத்துக்கு அவர் அளித்த பேட்டியின் முழு விபரமும் பின்வருமாறு:

இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதனால் இப்பகுதியிலிருந்து மக்கள் முழுமையாக வெளியேறிவிட்டனர். இப்பகுதியில் உள்ள பதினையாயிரம் மக்களில் பெரும்பாலானோர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். ஏனையோர் மடுப்பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர். இராணுவத்தினரால் இப்பகுதியில் உள்ள பதினொரு கிறிஸ்தவ ஆலயங்கள், கன்னியாஸ்திரி மடங்கள், என்பன

(4ஆம் பக்கம் பார்க்க)



## சிங்கராயர் விவகாரம் விவாதிக்க ஆயர் தடை

(யாழ்ப்பாணம்)

அருட்திரு ஆபரணம் சிங்கராயர் தொடர்பான விடயம் யாழ் ஆயரின் தடை உத்தரவினால் யாழ் மறைமாவட்டப் பொது நிலையினர் கழகப் பொதுக் கூட்டத்தில் விவாதிக்காமல் கைவிடப்பட்டது.

யாழ் ஆயரின் தடை உத்த

(4 ஆம பக்கம் பார்க்க)

## வானில் வந்தவர்களால் 6 தமிழர்கள் கடத்தல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஆறு பொதுமக்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள்.

கடந்த பதினோராம் திகதி திருமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி கடற்கரை விடுதியில் வேலை செய்துகொண்டிருந்த இரட்ணம், நஞ்சிதா, சந்தியா, சோமசுந்தரம், முத்துலிங்கம் ஆகியோரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள் இவர்களை வெள்ளை வானில் வந்த நபர்களே கடத்திச் சென்றுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மடு அகதி முகாமில் நோய்கள் பரவுகின்றன

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு அகதிகள் முகாமில் நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார வசதிகள் இன்மையால் பல்வேறு நோய்கள் இங்குள்ள மக்களைப்பீடித்து வருகின்றன.

பொதுவாக இங்குள்ள சிறுவர்களுக்கு காய்ச்சல், கண்ணோய், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் மிக வேகமாக பரவி வருகின்றன. இம் முகாமில் இருந்து பல சிறுவர்கள் மேற்படி நோய்களுக்கு சிகிச்சைபெறுவதற்காகப்பலத்த போக்குவரத்து சிரமங்களின் மத்தியில் யாழ். போதனா மருத்துவ மனைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (ந)

## தி. மு. க தலைவர் கருணாநிதியை எதிரணிக்குத் தள்ளுவது இந்தியஐக்கியத்திற்கு ஆபத்து

''கருணாநிதி பதவியில்இல்லாது எதிரணியில் இருந்தால் அதுவே திராவிடர் இயக்கம் வளர்ச்சியடையப் பெரிதும் காரணமாய் அமைந்துவிடும்''

இப்படிக் கூறுகிறார் இன்றைய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரின் சகோதரனும், முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் தகவற்துறை ஆலோசகரும், தலைசிறந்த பத்திரிகை ஆசிரியருமான பிரேம் சங்கர் ஜா.

அதாவது ஜெயலலிதா தலைமையிலான அண்ணா தி.மு.க வை பதவியில் ஏற்றி கருணாநிதி தலைமையிலான தி.மு.க வை எதிரணிக்குத்தள்ளினால் அதன் விளைவு திராவிடக் கழகம் வளர்ந்து இந்தியா துண்டுபட உதவுமெனக்கூறுகின்றார்.

மேலும் அவரது கருத்தின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜூன் 6 இல் இருந்து 15 வரை முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ்விழா எதிர் வரும ஜூன் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மங்களகரமாக நடைபெற உள்ளது என விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருந்த முத்தமிழ் விழா ஏற்கனவே அறிவிக்கப் பட்டமைக்கமைய மானிப்பாய், புங்குடுதீவு, சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களில் சிறப்புற நடைபெறஒழுங்குகள்செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டைத் தமிழரின் பெருமைகள், பழந்தமிழர் சால்புகள், தமிழர் தம் கலை, பண்பாட்டுத் தனித்துவங்கள், தமிழீழ மக்களின் - தமிழீழ மண்ணின் தேவைகள் ஆகிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் குற்றப் புலனாய்வு பொறுப்பதிகாரி கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியும், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரூபவாஹினி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா பஸ் டிப்போ ஊழியருக்கு சம்பளமில்லை

(வவுனியா)

வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா டிப்போவினால் மீண்டும் பஸ் சேவை நடாத்தப்பட்டு வருகின்ற போதிலும், இந்த டிப்போ பிரிவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கடந்த மாதங்களுக்கான சம்பளப் பணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா டிப்போ பிரிவினால் மூன்று பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இரு பஸ்கள் வவுனியா பஸ் நிலையத்திலிருந்து தாண்டிக்குளம் பகுதி வரையும், இன்னொரு பஸ் சிங்களப் பகுதி ஒன்றிற்கும் சேவைக்கு விடப்பட்டுள்ளது.

வவுனியா நகர்ப்பகுதியில் சிவில் நிர்வாக சேவை இடம்பெறுவதாக அரசினால் அறிவிக்கப்பட்ட போதிலும் ஊழியர்களுக்கு சம்பளப் பணம் வழங்கப்படாதது குறித்து இது சம்பந்தமான உயர் அதிகாரிகளிடமும் வவுனியா அரச அதிபரிடமும் புகார் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் அறிவிக்கப்பட்டது.

(இ)

## பண்ணிசைப் போட்டிகள்

(ஈச்சமொட்டை)

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 25ஆம் 26ஆம் திகதிகளில் வினாவிடை, பண்ணிசைப் போட்டிகள் என்பன கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் இடம்பெறும். இப்போட்டியில் யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றலாம் எனவும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் சித்திபெறுபவர்களுக்கு 28ஆம் திகதி பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

## அரசியல் நெருக்கடி

(பெல்கிரேட்)

யூகோஸ்லவாக்கியாவில் அரசியல் நெருக்கடி எப்போதும் இல்லாதவாறு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் சோசியா குடியரசு சுதந்திரம் கோரி பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துகின்றது.

இந்த நெருக்கடி காரணமாக யூகோஸ்லவாக்கியாவிற்கு ஜனாதிபதியோ அல்லது ராணுவத் தளபதியோ அற்ற நிலை ஏற்பட்டுள்ளதனால் அங்கு ராணுவப் புரட்சி ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுவதாக கூறப்படுகிறது.

எட்டு மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு ஜனாதிபதி பதவி வருடாவருடம் மாற்றியமைக்கப்பட்டு வந்தது.

பின்னர் சோசியா குடியரசில் ஏற்பட்ட மாற்றங்களால் ஜனாதிபதி பதவி நீக்கப்பட்டிருந்தது.

## 47 ஆம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை தீபன்

(சுப்பிரமணியம் சுகந்தகுமார்) (சுதன்)

| வீரஜெனனம் | வீரமரணம் |
|---|---|
| 15 - 07 - 1974 | 04 - 04 - 1991 |

எப் பிறப்பில் காண்போம் இனி!
உன் ஆருயிர் தந்தையையும் தாயையும் உன்
உடன் பிறப்புக்களையும் தவிக்கவிட்டு
எங்கு சென்றாய் எம கண்ணே!
வாடித் தவிக்கின்றோம் செல்வமே!
தமிழன்னை விலங்கொடிக்க சென்ற வீரமறவனே
களத்திலே தீபன் என்ற நாமத்தோடு
தச்சன்காட்டு மண்ணில் இராணுவத்துடனே
நேரடி மோதலில மடிந்தாயே தீபா!
உன் பிரிவால் வாடுகின்றோம்! ஏங்கித்
தவிக்கின்றோம்!
தீப ஜோதியாய் திகழ்ந்தவனே...! தீபனே
எம்மை வானில் இருந்து வாழ்த்துவாய் எம்
கண்மணியே
எப்பிறப்பில் காண்போம் - இனி

உன் பிரிவால் தாங்கொணாத் துயருறும்
பாசமிகு அப்பா, அம்மா, தம்பிமார், தங்கைமார்,
பேத்திமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

''குமாரகோட்டம்''
வடடுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை,

(B/ 2552)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 21**



லெப். வாசன்

(மாணிக்கவாசகர் சுவீந்திரராசா - புன்னாலைக்கட்டுவன்)

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் குருநகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**லெப். வாசன்** (மாணிக்கவாசகர் சுவீந்திரராசா - புன்னாலைக்கட்டுவன்)

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் சந்திவெளியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**2ஆம் லெப். உலன்** (வேலாயுதம் மனோகரன் - சந்திவெளி)

**வரதன்** (வேலாயுதம் வேல்நாயகம் - சந்திவெளி)

1989ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட

※ **வேலுச்சாமி சிவராசா** (மரப்பாலம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

※ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2525)


## அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி!

உங்களுக்குத் தேவையான

★ கடவுச் சீட்டு (பாஸ்போட்) படங்கள்
★ அடையாள அட்டைப் படங்கள்
★ கலர்ப் படங்கள் என்பனவற்றை
குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும்,

★ அடையாள அட்டை கவரிடுதல்
★ போட்டோஸ்டற் பிரதி செய்து கொள்ளல்
(உங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் பிரதி செய்யலாம்)

போன்ற இதர தேவைகளையும், மற்றும் அல்பம், புகைப்படச் சுருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

ஈழத்தென்றல்

14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:- குறித்த தவணையில் கலர்ப்படச் சுருள்களை கழுவிப் பெற நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

(B 2549)

## யாழ்நகரில் கம்ப்யூட்டர் கல்வி




※ Basic ※ d Base III+ ※ Lotus 1 - 2 - 3 ※ Word Processing

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன 25-05-91 (1-30 p.m) (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு: 27-05--91 (1-30p.m) (திங்கள், புதன், வெள்ளி)

UNIKCO COMPUTER CENTRE

37, CLOCK TOWER ROAD, JAFFNA

(B-2547)

**சிந்தனைக்கு**

உரிமையை மறுத்து விட்டு
சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியாது.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# இனப்பிரச்சினை தீர்விற்கு பொது யோசனைத் திட்டம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொது யோசனைத் திட்டம் ஒன்றை இம்மாத முடிவிற்குள் தயாரித்துச் சமர்ப்பிக்கும்படி அனைத்து அரசியற் கட்சிகள் மாநாட்டின் சட்டவரைவுக் குழுவை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பணித்திருக்கின்றார்.

அதாவது சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்க் குழுக்களையும், முஸ்லிம் குழுக்களையும் ஓர் பொது உடன்பாட்டிற்கு வருமாறு கோரி காலத்தை நீடித்துவந்த சிறிலங்கா ஜனாதிபதி திடீரென ஜூன் மாத ஆரம்பத்தில் இனப்பிரச்சினை தீர்விற்கு ஒரு பொதுத்திட்டத்தைத் தயாரித்து ஆயத்தமாக இருக்குமாறு கோரியுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் ஜூன் மாதத்தில் பல வெளிநாட்டு அரசியல் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்பதனை நாம் இதற்கு முன்னரும் இந்தப் பகுதியில் ஒரு வாரத்தின் முன்பும் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த அழுத்தங்களின் வெளிப்பாட்டில் ஒன்றே சில தினங்களுக்கு முன் இலங்கை வருவதற்கான சர்வதேச மன்னிப்புச் சபைக்கு வழங்கப்பட்ட அனுமதியாகும். அடுத்த வெளிப்பாடே இம்மாத முடிவிற்குள் இனப்பிரச்சினை தீர்விற்கு பொதுத்திட்டமொன்றை வரையுமாறான பணிப்பாகும்.

சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு செவி சாய்க்கும் காலம் வருகின்றது என்பதை உணர்ந்த சிறிலங்கா அரசாங்கம் அதற்கு முன்னர் பெரும் இராணுவ வெற்றி ஒன்றை எதிர்பார்த்தே வவுனியாவில் இம்மாத ஆரம்பத்தில் தாக்குதலை ஆரம்பித்தது. ஆனால் இராணுவ வெற்றி கிட்டமுடியாத நிலையில், சர்வதேச அழுத்தங்களுக்கு செவி சாய்க்கவேண்டிய காலமும் தேவையும் நெருங்கி வருவதால்தான் சிறிலங்கா ஜனாதிபதி பொதுத் தீர்வுத் திட்டத்தைக் கோருகின்றார்.

இன்றுள்ள சர்வதேச அழுத்தங்களில் முக்கியமானதாக ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் மனித உரிமைகள் மீதான அழுத்தத்திற்கடுத்தது இந்தியாவின் பொதுத்தேர்தலாகும். இந்தியப் பொதுத் தேர்தலுக்கான கருத்துக் கணிப்புகள் இந்திரா காங்கிரஸ் கட்சியே பெரும்பாலும் ஆட்சியைக் கைப்பற்றும் எனத் தெரிவிக்கின்றன. இந்திரா காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறாமல் ஆட்சிக்கு வந்தாலும் கலைக்கப்பட்ட வி.பி.சிங் அரசாங்கம் போன்றோ, சந்திரசேகா அரசாங்கம் போன்றோ அல்லாமல் வெளியுறவுக் கொள்கையில் சில முனைப்பான உறுதியான செயற்பாடுகளைக் கொண்டதாகவே இருக்கும். இதில் சந்தேகப்படத் தேவையில்லை. இதனை பங்களாதேஷிற்கு நிவாரண நடவடிக்கைகளுக்காக அமெரிக்க இராணுவம் வந்துள்ளமையை ராஜீவ் காந்தி ஆட்சேபித்ததில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

இந்நிலையில், இலங்கையில் தமிழர் தேசிய இனப் பிரச்சினையும், 1987 இல் இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையில் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தமும் புறக்கணிக்கப்பட்டவையாக இருக்காது. தான் ஆட்சியில் இருக்கும்போது செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தான் பதவியில் இல்லாதபோது புறக்கணிக்கப்பட்டதை ராஜீவ் காந்தியால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றில்லை. இதனை சிறிலங்காவும் உணர்ந்துள்ளதோடு வெளிப்படுத்தியும் உள்ளது. தென்னாசியாவில் ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராவதை விரும்பாத நாடுகளில் முதன்மையானது சிறிலங்கா என அரசியல் அவதானிகள் கருத்தும் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே இன்று இனப்பிரச்சினைத் தீர்விற்கு பொதுத்திட்டம் ஒன்று வரைவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி பணித்துள்ளார். இப்பொதுத்திட்டத்தைக் கொண்டு இந்திய-சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தையும், ராஜீவ் காந்தியின் அரசியற் தலையீட்டையும் பெரிதும் மட்டுப்படுத்தலாம் என சிறிலங்கா ஜனாதிபதி எண்ணுகின்றார் போலும்.

ஆனால் 1977 ஆம் ஆண்டு இனப்பிரச்சினை கூர்மை அடைந்து ஆயுதப் போராட்டமாக மாறிய பின்னர் காலத்திற்குக்காலம் ஏற்பட்ட சர்வதேச அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஏற்ப சிறிலங்கா அரசாங்கம் திட்டங்களை முன்வைத்தும், செயற்படுத்தியும் அழுத்தங்களில் இருந்து தன்னை ஓரளவு விடுவித்துக் கொண்டது. ஆனால் தமிழர் தேசிய பிரச்சினையை சிறிலங்கா அரசாங்கத்தால் தீர்த்து வைக்க முடியவில்லை. இந்த நிலையில் சர்வதேச அழுத்தங்களில் இருந்தும் தமிழர் பிரச்சினையில் இருந்தும் சிறிலங்கா விடுபட வேண்டுமானால் ஒரே வழி தமிழரின் நியாயபூர்வமான உரிமைகளை ஏற்றுக்கொள்வதே ஆகும்.

# வவுனியாப் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில்

(வவுனியா)

வவுனியா தெற்கு உதவி அரச அதிபர் பிரிவு பாடசாலைகள் குண்டு வீச்சு விமானங்களினால் தகர்க்கப்பட்டிருக்கும் காரணத்தினால் அப்பகுதிப் பாடசாலைகளுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் செல்ல முடியாத நிலையேற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை கொத்தணி பாடசாலை உட்பட பல பாடசாலைகள் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன.

சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு அண்டிய இடங்களில் உள்ள நொச்சிமோட்டை, சமயபுரம், மருக்காரம்பளை போன்ற சிறிய பாடசாலைகளில் கூட அச்சமில்லாமல் மாணவர்கள் பாடங்கள் கற்க முடியாத நிலையிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசபடைகளின் அச்சுறுத்தல் காரணமாக இடம்பெயர்ந்து சென்றுள்ள பல ஆசிரியர்கள் பட்டிருப்பதி அகதி முகாமில் தஞ்சமடைந்திருப்பதும், அங்கு அகதிகளாக உள்ள மாணவர்களுக்கு பல ஆசிரியர்கள் பாடம் கற்பித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் தமிழ் அரசாங்க அதிபர் பிரிவில் நகரப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சேவையாற்றச் செல்வது சாத்தியமற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

(தி)

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசாங்க பேச்சு முறிவு

தென்னாபிரிக்காவில், வெள்ளையரல்லாத மக்கள் வாழும் பகுதிகளில் இடம்பெறும் வன்செயல்களை ஒரு முடிவிற்குக் கொண்டுவர தென்னாபிரிக்க ஜனாதிபதி டி. டி. கிளார்க் நடவடிக்கை எடுக்காததால் தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சுவார்த்தையை நடத்தமாட்டோம் என ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இந்த மாதம் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற விருக்கும் வன்முறையை நிறுத்துவதற்கான சமாதானப் பேச்சுக்களில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பங்குபற்றாது என இக் கட்சியின் பொதுச் செயலாளர் அல்பிரட் ஒல்சோ தெரிவித்தார்.

ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் அரசியல் கைதிகளை விடுவித்து நாடு கடந்துவாழ்வோர் தாயகம் திரும்புவதற்கு வகை செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கைக்கும் வெள்ளையரல்லாத மக்கள் வாழும் பகுதிகளில் கடந்த 9ஆம் திகதிக்குள் வன்முறைக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற எச்சரிக்கைக்கும் தென்னாபிரிக்க அரசு செவி சாய்க்கவில்லை என்றும் அல்பிரட் ஒல்சோ தெரிவித்தார்.

## பாக். காஷ்மீர் மீது இந்தியா தாக்குதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர்மீது இந்திய இராணுவம் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டிருப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. இத்தாக்குதல் காரணமாக பாகிஸ்தானின் எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேறியிருப்பதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

இந்திய இராணுவம் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலால் பல வீடுகள், அரசாங்கக் கட்டடங்கள் பாடசாலைகளும் சேதமடைந்திருப்பதாக பாகிஸ்தான் அதிகாரிகள் கூறியுள்ளனர். இது தொடர்பாக இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதுவரிடம் பாகிஸ்தான் அரசு கவலை தெரிவித்துள்ளது.

## வடபகுதி மீனவர்களை கூட்டுத்தாபனம் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

எட்டு வருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கு பகுதி மீனவர்கள் கடன் பெறுதல், கழிவு விலையில் உற்பத்திப் பொருள்கள் பெறுதல் என்பவற்றில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் மீன்பிடி கூட்டுத்தாபனம் கைவிட்டுவிட்டதாக யாழ் மாவட்ட கிளை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வடக்கு கிழக்கு பகுதியில் மீன்பிடித்துறை முற்றாக பாதிக்கப்பட்டு உள்ளது இன்றும் தென்பகுதியில் கடற்றொழில் வங்கிக் கடன் 50 வீத கழிவுடன் படகு இயந்திரம் வழங்கல் சுயதொழில் உற்பத்திக் கடன் அத்துடன் மீனவர் வீடமைப்பு திட்டம் என்பனவும் உட்பட விசேட கடன் திட்டங்களும் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்றார்.

(லோ)

## வடக்கு ஈராக்கில் 500 ஐ.நா.காவலர்கள்

(பாக்தாத்)

வடக்கு ஈராக்கின் எல்லைப் பகுதிகளில் ஐந்நூறு ஐ.நா பாதுகாப்புச் சபையின் காவலர்களை நிறுத்துவதற்கு ஐ.நா.சபையும், ஈராக்கும் உடன்பட்டுள்ளன.

மீண்டும் ஈராக்கிற்கு திரும்பும் குர்திஷ் இன மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஈராக்கில் உள்ள ஐ.நா.சபையின் பிரதிநிதி தெரிவித்தார்.

இதே நேரம் குர்திஷ் மக்களுக்கென அமைக்கப்பட்ட முகாம்களில் பாதுகாப்பிற்கென நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கூட்டணிப்படைகள் விலகுமா என்பது குறித்து தமக்குத் தெரியாது என்று தெரிவித்த அவர் சட்டப்படி ஐ.நா.சபையின் காவல் படை வந்ததும் அவர்கள் விலக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## லெபனான்மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்

(பெய்ரூட்)

லெபனானின் தென் பகுதியிலுள்ள அமல் தீவிரவாதிகளின் தளமொன்று நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய விமானங்களின் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு இலக்கானது. இத்தாக்குதலின்போது ஒரு அதிகாரியும் இரண்டு பாலஸ்தீனியத் தளபதிகளும் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலியர் ஆக்கிரமித்துள்ள லெபனானின் தென் பகுதியில் நேற்று முன்தினம் அதிசக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்துள்ளது. இதில் மூவர் கொல்லப்பட்டனர். நான்கு பாலஸ்தீனியப் பெண்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். இக் குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு தாமே பொறுப்பு என்று ஈரானிய சார்பு ஷியா இயக்கமொன்று கூறியுள்ளது.

## 30நாள் அவகாசம்

(குவைத்)

குவைத்தில் அனைத்துப் பிரஜைகளும் முப்பது நாட்களுக்குள் தங்களிடம் உள்ள துப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட வேண்டும் என குவைத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்றும் அரசாங்கம் எச்சரித்துள்ளது.

ஈராக்கிய ஆக்கிரமிப்பின் போது ஈராக்கியர்களோடு உடந்தையாக செயல்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் மீது நேற்று முன்தினம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் பாலஸ்தீனர்கள் ஈராக்கியர்கள் போன்றோரும் அடங்குவர்.

## முபாரக்-அல்ஆசாத் டமாஸ்கசில் சந்திப்பு

மத்திய கிழக்கு சமாதான மாநாடு தொடர்பாக எகிப்தும், சிரியாவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் சிரிய ஜனாதிபதி அல் ஆசாத்தைச் சந்தித்துப் பேசுவதற்காக டமாஸ்கஸ் சென்றுள்ளார். இவர்கள் நடத்தும் பேச்சுவார்த்தை விபரங்கள் அந்தரங்கமாக வைக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு விவகாரத்தில் மற்றொரு முக்கிய பிரமுகரான ஜோர்தான் மன்னர் ஹுசைன் டமாஸ்கஸ் சென்று சிரிய ஜனாதிபதியுடன் பேசிய பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில், அமெரிக்காவும், சோவியத் யூனியனும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டுக் கூட்டத்தை நடத்த எடுக்கும் முயற்சிகளில் அரபுகள் மத்தியில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முயலுவதாகக் குறிப்பிட்டார்.

## கால் நடைகளால் விவசாயம் அழிப்பு

(வவுனியா)

பாலமோட்டை நீர்ப்பாய்ச்சல் குளத்தின் கீழ் பயிர் செய்யப்பட்ட பல ஏக்கர் நெல் வயல்கள் மாடுகளால் அழிக்கப்பட்டன.

சமீபத்தில் பாலமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சு நடவடிக்கையை அடுத்து இப்பகுதி மக்கள் அனைவரும் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றனர் இவ்வேளையில் நூற்றுக்கணக்கான மாடுகள் அங்கு பயிர் செய்யப்பட்டிருந்த வேளாண்மையைத் தின்றழித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 25 ஏக்கர் வயல் நிலம் இவ்வாறு அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (தி)

# இந்திய தேர்தல் களத்தில் பரவலான வன்முறை

(டெல்கி)

பீகாரில் 18 வாக்களிப்பு நிலையங்களில் மறு வாக்குப் பதிவுக்குத் தேர்தல் ஆணைக் குழு உத்தரவிட்டுள்ளது. பீகாரிலும், மீரட்டிலும் நேற்றுத் தேர்தல் மோதல்கள் இடம்பெற்றன. பரஸ்பரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு, கத்திக் குத்துச் சம்பவங்களில் 35 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்காளத்தில் அஸன்சாரிலும் 2 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவு இடை நிறுத்தப்பட்டு மறு வாக்குப் பதிவுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

பீகாரில் பல்வேறு இடங்களில் நடந்துள்ள தேர்தல் வன்முறையில் ஒரு தேர்தல் அதிகாரி உட்பட குறைந்தது 3 பேர் கொல்லப் பட்டார்கள் 5 பேர் காயமடைந்தனர்.

ராம் நகரில் தேர்தல் அதிகாரி ஒருவர் சில விஷமிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என அரசாங்க அதிகாரி தெரிவித்தார்.

முசப்பூரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். 30 பேர் காயமடைந்தனர்.

உத்தரப் பிரதேசத்தில் மீரட்டில் நேற்று நடைபெற்ற வாக்குப் பதிவின் போது ஏற்பட்ட கோஷ்டி மோதல்களில் குறைந்தது 12 பேர் கொல்லப் பட்டனர் அந்த நகரம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

முலன்சேர் மாவட்டத்தில் சிக்கந்தரமாத் நகரத்திலும், குலாவத்தியிலும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து கால வரையறையற்ற ஊரடங்கு போடப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் ஜயந்தாரி கிராமத்தில் இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 3 வயதுக் குழந்தை ஒன்று கொல்லப்பட்டுளளது.

ஆந்திரப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை விஷமிகள் கைப்பற்றி வாக்குப் பெட்டிகளைத் தூக்கி எறிந்தனர். ஹரியானாவிலும் வாக்களிப்பு நிலையங்கள் கைப்பற்றப்பட்டன அங்கும் வாக்குப் பதிவு நிறுத்தப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் இல்லத்தின் மீது நேற்று முன்தினம் இரவு எதிரணியினர் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து இறந்தவரின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

டெல்லியில் நேற்று நடைபெற்ற 7 லோக்சபாத் தேர்தலுக்கான வாக்குப் பதிவில் 45 முதல் 50 சத விகிதமான வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்தினர், சாந்தி நகர் தொகுதியில் தான் 50 சத விகிதமான வாக்களிப்பு இடம் பெற்றது. தெற்கு டெல்லி தொகுதியில் 33 சதவிகித வாக்காளர்தான் தமது வாக்குகளை அளித்தனர்.

பல இடங்களில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றும் முயற்சிகளும் நிகழ்ந்துள்ளன.

உத்தரப்பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த வாக்காளர்களை 7 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லையாம்.

உயர் பதவி

## ஆள்சேர்ப்புப் பரீட்சைகள் இனி கொழும்பில்மட்டும்

(கொழும்பு)

உயர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பதற்கான பரீட்சைகள் இனிமேல் கொழும்பில் மாத்திரம்தான் நடைபெறும் அரசாங்கம் இப்படியொரு தீர்மானத்துக்கு வந்திருப்பதாக அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு வட்டாரங்களின் உறுதியளிக்கப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

## லெப். வாசன் நினைவுக் கூட்டம்

(குருநகர்)

குருநகர் பிரதேச முன்னாள் பொறுப்பாளர் லெப். வாசன் நினைவுக் கூட்டம் இன்று (21-5-91) மாலை ஆறு மணிக்கு குருநகர் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றுவர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். (21)

## 22 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட 22 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

வலிகாமம் பிரிவுச்செயலகத்தில் வைத்து இவர்கள்விடுவிக்கப்பட்ட சம்பவத்தில் விடுதலைப் புலிகள்மக்கள முன்னணியின் பிரமுகர்கள் திரு பரா, திரு. பாப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிங்கள தேசத்தில்

பொருளாதாரத் தடைகளையும் அழுத்தங்களையும் உடைத்தெறிந்துசுயசார்பான தன்னிறைவான, பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்ப நாம் நடாத்திவரும் உறபத்திப்போர், இந்த இருமுனைப் போராட்டங்களையும் வெற்றிகரமாக முன்னெடுத்தால் தான் நாம் எமது அரசியல் இலட்சியத்தை அடைய முடியும்.

நீண்ட நெடுங்காலமாக எமது தாயகப்பூமி ஒரு தன்னிறைவான தங்குநிலையற்ற பொருளாதார வாழ்வுடைய செழிப்பான நடாக விளங்கி வந்தது. அந்நிய காலனித்துவ ஊடுருவல்கள் எமது தேசிய பொருளாதாரக் கட்டுக் கோப்பை சிர்குலைத்தன. வெளிநாட்டுப் பண்டங்களும் அந்நிய நுகர்வுப் பழக்கங்களும் எமது மக்கள்மீது திணிக்கப் பட்டன. ஆங்கில ஏகாதிபத்தியம் பெருந்தோட்ட பொருளாதார அமைப்பை உருவாக்கி ஒற்றை ஆட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தி கொழும்புச் சந்தையை மையப்படுத்தியது. இதனால் தமிழீழப் பொருளாதாரம் தனது தனித்துவத்தை இழந்த சீர்குலைந்தது கொழும்புச்சந்தைக்கு அடிமைப் பட்ட தங்கு நிலையானபொருளாதார வாழ்வில் தமிழீழ மக்கள் சிக்குப்பட்டனர். சிங்கள ஆளும் வர்க்கம் இந்த தங்கு நிலையான பொருளாதாரத்தை ஊக்குவித்து வந்தது. பொருளாதார ரீதியில் தமிழர்கள் தென்னிலங்கையில் தங்கி இருக்கும் வரை தன்னாட்சி உரிமைப் போராட்டம்வெற்றி பெறாது என்பது சிங்களப் பேரினவாதிகளின் கணிப்பீடு. இதனால்தான் காலத்திற்குக் காலம் விடுதலைப் போராட்டம் கூர்மையடையும் போது தமிழர்கள்மீது பொருளாதார நெருக்குதல்களை உண்டு பண்ண சிங்கள அரசு தயங்குவதில்லை இம்முறை இந்தப் பொருளாதார நெருக்குதல் என்றுமில்லாதபடி தீவிரமாக்கப்பட்டிருக்கின்றது.

சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் பொருளாதார அச்சுறுத்தல் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்பட்டுள்ள மாபெரும்சவால் ஆகும். இந்தச் சவாலை நாம் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். எமது மண்ணில் எமது கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான வாழ்வை நாம் கட்டி எழுப்ப வேண்டும். இது இன்றைய வரலாற்றுத் தேவையும் கூட என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழ்

வற்றை வெளிப்படுத்தும் வகையிலான அறபதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் இயல், இசை, நாடக வடிவங்களில் பொங்கிப் பொலிந்திட உள்ளன என்றும்,

தமிழீழப் பெருமக்கள் யாவரும் ஒன்றிணைந்து திரண்டு வந்து வரலாறு காணாத வகையில் நடைபெறவுள்ள இந்த முத்தமிழ் விழாவின் நிகழ்வுகள் யாவற்றிலும் கலந்து கொண்டு பயன் பெற்றுக் கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிரணிக்குத்

தர்க்கபூர்வப் போக்கு என்னவெனில கருணாநிதி ஆட்சியில் இல்லாவிட்டால் அது ஈழப் போராட்டத்திற்கும் ஒரு தூண்டுதலை அளிக்குமென்பது இந்தவகையில் வி. பி. சிங், கருணாநிதி கூட்டு தமிழக அரசியலைப் பொறுத்தும், ஈழப் போராட்டத்தைப் பொறுத்தும் சாதகமான ஓர் அம்சம் என்பதே இவரது கருத்தின் இறுதி முடிவாகும்.

சம்பள நிலுவைகள்

வரையறைகள் நீக்கப்பட்டுள்ளன. இதற்கான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 32/89(11)திணைக்களத் தலைவர்களுக்கும், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

1980 ஜூலை 18ஆம் திகதி பதவியைவிட்டு வெளியேறிய உத்தியோகத்தர்களுக்கு சம்பளக் கொடுப்பனவு 1980 ஜூலை 1ஆம் திகதி முதல் வழங்கப்படும்.

1984 ஜனவரி 1ஆம் திகதிக்குப் பிறகு சேவையில் அமர்த்தப்பட்டுள்ள, அல்லது அமர்த்தப்படவுள்ளவர்களுக்கும், அவர்கள் சேவைக்கு சமூகமளிக்காத காலத்துக்கும் சாதாரணமாக வழங்கப்பட வேண்டிய சம்பள ஏற்றங்களும், சம்பள நிலுவைகளும் கொடுக்கப்படலாம்.

அரசாங்க நிருவாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர். ஆபேரத்ன சுற்றுநிருபத்தை அனுப்பியுள்ளார்.

சிங்கராயர்

ரவு காரணமாக அருட்திரு சிங்கராயரின் விடயம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது என்று அருட்திரு எஸ் ஏ மைக்கேல் சுவாமி அறிவித்தார். இதனை உறுப்பினர் கண்டித்ததுடன், கவலையையும் தெரிவித்தனர்.

2ஆம் வத்திக்கான் சபைத் தீர்மானத்தின்படி நாம் சுதந்திரமாக செயற்படவேண்டும் என்றும் சபையோர் கேட்டுக் கொண்டனர்

## இன்று போனஸ்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான 1990ஆம் ஆண்டிற்கான போனஸ் இன்று 21ஆம் திகதி நாவலர் வீதியில் உள்ள தற்காலிக பணிமனையில் வழங்கப்படும் என மேற்படி கூட்டுத்தாபன கணக்காளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்

நேற்றுமாலை தெரிவித்தது.

இச்சம்பவம் மட்டகளப்பு நகர்பகுதியில் நேற்று இடம் பெற்றதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

செட்டிக்குளத்தில்

உடைக்கப்பட்டுள்ளன; கொள்ளையடிக்கப்பட்டுள்ளன: இப்பகுதியில் சுமார் 10 பொதுமக்கள் வரையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிலர் துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்யப் பட்டுள்ளனர். ஏனையோரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. இராணுவம் இப்பகுதியில் நிலை கொண்டுள்ளதனால் இராணுவக் கெடுபிடிகளுக்கு அஞ்சி இப்பகுதிகளுக்குச் செல்ல மக்கள் அஞ்சுகின்றனர். மக்கள் மீண்டும் அங்கே குடியேறக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை. இதனால் நானும் இப்போது மடுத் திருப்பதியிலேயே தங்கியுள்ளேன் என்றார்.

மன்னார் ஆயர் இராணுவத்தால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்துக் கேட்டபோது இது சம்பந்தமாக எமது கண்டனத்தை மன்னார் ஆயர் ஊடாக இலங்கை ஆயர் மன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். இது தொடர்பாக மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆயர் மன்றம் தான் தீர்மானிக்க வேண்டும் என்றார்,

## உயர்தர பரீட்சைக்கான கால அட்டவணை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இரண்டாம் கட்ட விஷேட க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குரிய நேர அட்டவணை பின்வருமாறு:

23-05-91 வியாழக்கிழமை - 11ஆம் நாள்
8.30-10.30- பௌதிகவியல் 1 12.30-15.30-07 விவசாய விஞ்ஞானவியல் 1
8.30-11.30 - 17 கணக்கியல் 1 -49 ஜேர்மன் 1
- 41 பாளி 1 -50 ருசியன் 1
-52 உருது 1
-53 சீனமொழி 1

24 - 05 - 91 வெள்ளிக்கிழமை 12ஆம் நாள்
8.30-11.30 -03 பௌதிகவியல் 11 13.30-16.30-07 விவசாய விஞ்ஞானவியல் 11
17 கணக்கியல் 11 -28 கிரேக்க உரோம நாகரீகம் 11
41 பாளி 11
49 ஜேர்மன் 11
50 ருசியன் 11
52 உருது 11
53 சீனமொழி 11

25 - 05 - 91 சனிக்கிழமை 13 ஆம் நாள்
8.30-11.30 -38 சிங்களம் 11 12.30-15.30 - 22 இந்துசமயம் 1
23 கிறிஸ்தவம் 1
24 இஸ்லாம் 1
42 சமஸ்கிருதம் 1

29 - 05 - 91 புதன்கிழமை 14ஆம் நாள்
8.30-11.30 -29 சித்திரம் 11 12.30-15.30- 22 இந்துசமயம் 11
40 ஆங்கிலம் 1 23 கிறிஸ்தவம் 11
24 இஸ்லாம் 11
42 சமஸ்கிருதம் 11

30 - 05 - 91 வியாழக்கிழமை 15ஆம் நாள்
8.30-11.30 -29 சித்திரம் 111 12.30-15.30 - 16 வர்த்தகமும் நிதியும் 1
40 ஆங்கிலம் 11

31 - 05 - 91 வெள்ளிக்கிழமை 16ஆம் நாள்
8.30-11.30 -08 புவியியல் 1 13.30-16.30 - 16 வர்த்தகமும் நிதியும் 11

01 - 06 - 91 சனிக்கிழமை 17ஆம் நாள்
8.30-11.30 -08 புவியியல் 11 12.30-15.30 -26 இந்து நாகரீகம் 11
27 இஸ்லாமிய நாகரீகம் 1

03-06-91 திங்கட்கிழமை 18ஆம் நாள்
8.30-11.30 -08 புவியியல் 111 12.30-15.30 - 26 இந்து நாகரீகம் 11
- 27 இஸ்லாமிய நாகரீகம் 11

04 - 06 - 91 செவ்வாய்க்கிழமை 19ஆம் நாள்
8.30-11.30 -12 அரசியல் மூல தத்துவங்கள் 1 13.30-16.30 -15 அளவை விஞ்ஞானமுறை 1

05 - 06 - 91 புதன்கிழமை 20ஆம் நாள்
8.30-11.30 -12 அரசியல் மூல தத்துவங்கள் 11 12.30-15.30 - 15 அளவை விஞ்ஞானமுறை 11

## மரண அறிவித்தல்

### திரு. நமசிவாயம் பொன்னையா

(சங்கம் பொன்னையா)

நமசிவாயம் பொன்னையா அவர்கள் காலமானார். இவர் நல்லம்மா, சுப்பிரமணியம் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, இன்னத்தம்பி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு புலோப்பளையில் நடைபெறும்.

'பொன் அகம்'
புலோப்பளை,
பளை.

தகவல்:
செ. சபாரத்தினம்

(R/1403)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.